**பாரதிதாசன் பல்கலைக்கழகம்,**
**(Accredited with “A+” Grade by NAAC)**
**பல்கலைப் பேரூர், திருச்சிராப்பள்ளி – 620 024**
**தமிழ்நாடு, இந்தியா**

**முனைவர் சு. சீனிவாசராகவன், M.A., M.L.I.Sc, Ph.D**
**தேர்வு நெறியாளர் (பொ)**

**அலுவலகம் : 0431- 2407016, 2407060**
**தொலைப்படி: 0431 – 2407444**
**மின்னஞ்சல் : coe@bdu.ac.in**
**வலைத்தளம்: www.bdu.ac.in**

---

**கடித எண் : தேர்வுப்பிரிவு/முதுநிலை/ஏப்ரல் 2020 தேர்வு** **நாள் : 03.02.2020**

பெறுநர்

முதல்வர்,
இணைவு பெற்ற (தன்னாட்சி பெறாத) கல்லூரிகள்

அய்யா/அம்மையீர்

பொருள்: முதுநிலை – எம்.ஏ., எம்.எஸ்ஸி., எம்.காம், பட்டயபடிப்புகள், எம்.பி.ஏ மற்றும் எம்.சி.ஏ ஏப்ரல் 2020 தேர்வு - எழுத்துத்தேர்வுகள், தேர்வு விண்ணப்பங்கள் பெறுவது – தொடர்பாக.

***

ஏப்ரல் 2020-ல் நடைபெறவிருக்கும் **பட்ட மேற்படிப்பு, பட்டயப்படிப்பு, எம்.பி.ஏ மற்றும் எம்.சி.ஏ** தேர்வுகளுக்கான பூர்த்தி செய்யப்பட்ட தேர்வு விண்ணப்பங்கள் உரிய தேர்வு கட்டணத்துடன் பெறுவதற்குரிய கடைசி நாள் கீழ்க்கண்டவாறு தெரிவிக்கப்படுகிறது.

தண்டத் தொகையின்றி மாணவர்களிடமிருந்து தேர்வு கட்டணம் மற்றும் தேர்வு விண்ணப்பங்கள் பெறுவதற்கான கடைசி நாள் : **10.03.2020 (செவ்வாய்கிழமை)**

தண்டத் தொகையின்றி பெறப்பட்ட தேர்வு கட்டணம் மற்றும் தேர்வு விண்ணப்பங்கள் கல்லூரி வாயிலாக பல்கலைக்கழகத்திற்கு வந்து சேர வேண்டிய கடைசி நாள் : **12.03.2020 (வியாழக்கிழமை)**

தேர்வு விண்ணப்பங்களைத் தண்டத்தொகையுடன் (ரூ.300+18% GST) மாணவர்களிடமிருந்து பெறுவதற்கான கடைசி நாள் : **17.03.2020 (செவ்வாய்கிழமை)**

தண்டத் தொகையுடன் மாணவர்களிடமிருந்து தேர்வு கட்டணம் மற்றும் தேர்வு விண்ணப்பங்கள் பெறுவதற்கு கடைசி நாள் : **19.03.2020 (வியாழக்கிழமை)**

19.03.2020-ம் தேதிக்குப் பிறகு, விண்ணப்பிக்கும் மாணவர்கள் தேர்வு விண்ணப்பங்களை தண்டத் தொகையுடன் கூடுதலாக ரூ.500/- உடன் (ரூ.300+ரூ.500=+&.800+18% GST -உடன் நேரடியாக சமர்ப்பிக்க வேண்டிய கடைசி நாள் : **26.03.2020 (வியாழக்கிழமை)**

(தேர்வு விண்ணப்பங்கள் கல்லூரிகள் மூலம் முறையாகப் பரிந்துரைக்கப்படவேண்டும். மாணவர்களின் வருகைப்பதிவுச் சான்று அவசியம் இணைக்கப்படவேண்டும். அஞ்சல்வழி அனுப்பப்படும் தேர்வு விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட மாட்டாது)

பட்டமேற்படிப்பு எழுத்துத் தேர்வு தொடங்கும் நாள் : 27.04.2020 **(திங்கள்கிழமை)**

பட்டயபடிப்பு எழுத்துத் தேர்வு தொடங்கும் நாள் : 15.05.2020 **(வெள்ளிக்கிழமை)**

**(குறிப்பு : 19.03.2020-க்குப் பிறகு பெறப்படும் விண்ணப்பங்கள் தண்டத்தொகை ரூபாய் 300/- + 500 = Rs.800/- மற்றும் அதற்குரிய 18% GST கூடுதலாக சமர்ப்பிக்கப்பட வேண்டும்)**

மேற்கண்ட தகவலை மாணவ/மாணவியர்களுக்கும், மற்றும் ஆசிரியர்களுக்கும் தெரிவிக்கும் வகையில் கல்லூரி அறிவிப்புப் பலகையில் வெளியிடுமாறு அறிவுறுத்தப்படுகிறது.

90 நாட்கள் கல்லூரி, இயங்கியதற்குரிய சான்றிதழைத் தேர்வு துவங்குவதற்குப் பத்து நாட்கள் முன்னதாகப் பல்கலைக்கழகத்திற்கு அனுப்பி வைக்கும்படி கல்லூரி முதல்வர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். முதுநிலைப் பாடப்பிரிவுகளுக்கான தேர்வு விண்ணப்பங்களை பாடவாரியாக (**M.A. M.Sc., M.Com., M.S.W., M.B.A., M.C.A & All PG Diploma courses**) தனித்தனியாக இணைப்புக் கடிதங்களுடன் அனுப்பி வைக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறது. இணையதளம் வழியாக செலுத்தப்பட்ட **E**-ரசீதுடன் தேர்வு கட்டண சுருக்கப் பட்டியல் **(Abstract for examination fee –Downloadable from University Website)** கண்டிப்பாக அனுப்பப்பட வேண்டும். அவ்வாறு தேர்வு கட்டண சுருக்கப்பட்டியல் இல்லாத E-ரசீதுகள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது என கனிவுடன் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

மேலும், 2019-2020-ல் சேர்க்கை பெற்ற முதலாமாண்டு மாணவர்களுக்கான இரண்டாம் பருவத் தேர்வு விவரங்களை, முதல் பருவத் தேர்விற்கு விண்ணப்பம் செய்ததைப் போலவே தனியாகப் பல்கலைக்கழக 'New Portal-ல் பதிவேற்றம் செய்யப்படவேண்டும் என்று தெரிவித்துக்கொள்ளப்படுகிறது. ஆனால் இரண்டாம் பருவத்திற்கான தேர்வு விண்ணப்பங்களை பல்கலைக்கழகத்திற்கு அனுப்ப வேண்டாம் என்று கேட்டுக் கொள்ளப்படுகிறது.

மீளப்பயிலுதல் **(Re-do)**, மறு சேர்க்கை **(Re-admission)** மற்றும் மாற்றுச் சேர்க்கை **(Transfer admission)** போன்ற விபரங்களை தேர்வு கட்டண சுருக்கப்பட்டியலில் தெளிவாக குறிப்பிட வேண்டும். மேற்கண்ட சேர்க்கைகளுக்காகப் பதிவாளரிடமிருந்து பெறப்பட்ட ஆணையின் நகலை அந்தந்த மாணவ மாணவிகளின் தேர்வு விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்பும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறது.

பூர்த்தி செய்யப்பட்ட தேர்வு விண்ணப்பங்கள் அனைத்தும் பல்கலைக்கழகத்திற்கு வந்து சேர வேண்டிய **கடைசி நாளான 26.03.2020 (வியாழக்கிழமை)**-க்குப் பின்னர் வரும் விண்ணப்பங்கள் எக்காரணத்தைக் கொண்டும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

இக்கடிதம் கிடைக்கப் பெற்றமைக்கு ஒப்புதல் அளிக்குமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**தேர்வு நெறியாளர் (பொ)**